தமிழ்நாடு அரசு பதிவுத் துறையைத் தனியார்மயமாக்குவதா? பல்லாயிரம் கோடி ரூபாய் வருவாயை அரசுக்குத் தரும்

பதிவுத் துறையில் தனியார் பெருநிறுவனங்கள் ஏன்?

திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அறிக்கை!

சென்னை, நவ. 8–

திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி விடுத்துள்ள அறிக்கை வருமாறு:–

தமிழ்நாடு அரசின் பதிவுத் துறை என்பது அரசுக்கு ஆண்டு தோறும் மாநில அரசுக்கு அதிக வருவாய் ஈட்டித்தருகிற துறையாகும். கடந்த 2025–2026 நிதியாண்டில் மட்டும் ரூ.25,546 கோடிகளுக்கு மேல் தமிழ்நாடு அரசுக்கு வருவாயை ஈட்டித் தந்துள்ளது. ஜிஎஸ்டி முறை அமலான பின்னர் மாநில அரசின் வரி அதிகாரங்களுக்கு உட்பட்டு இருக்கிற எஞ்சிய இனங்களில் மிக முக்கியமானது பதிவுத் துறை மூலம் கிடைக்கும் வருவாய்.

அத் துறையில் தனியார் நிறுவனங்களைப் பயன்படுத்துவதற்கான பணிகளைத் த.வெ.க. அரசு தொடங்கியிருப்பதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன. பத்திரப் பதிவுத் துறையை மறைமுகமாகத் தனியார் மயமாக்கும் இந்த ஏற்பாடு கண்டனத்துக்குரியதாகும்.

சந்தேகத்திற்கிடமில்லாமல் தெரிய வருகிறது!

அண்மையில், மாதிரிப் பதிவு மய்யங்களை நடத்துவதற்குத் தனியார் நிறுவனங்கள் விண்ணப்பிக்கலாம் என்று டெண்டர் ஒன்று விடுக்கப்பட்டுள்ளது. சென்னையில் அம்பத்தூர், திருவான்மியூர், தியாகராய நகர், செங்கல்பட்டு, கோவை ஆகிய 5 இடங்களில் சோதனை முயற்சி யாக முதற்கட்டமாகவும், மேலும் 20 இடங்களில் இரண்டாம் கட்டமாகவும் தனியார் பத்திரப் பதிவு மய்யங்கள் அமைக்க அரசு ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ளதாகவும் தெரிகிறது. முதலில் அய்ந்தாண்டுகள் சேவை வழங்கவும், பிறகு இரண்டாண்டுகள் நீட்டிக்கப்படவுமான வாய்ப்புடன் பதிவுத் துறையையே தனியார் மயமாக்குவதற்கான தொடக்கமே இது என்பது சந்தேகத்திற்கிடமில்லாமல் தெரிய வருகிறது.



தமிழ்நாடு அரசின் பதிவுத் துறையைத் தனியார் மயமாக்க வேண்டிய அவசியம் என்ன? இதனால், பெரும் பெரும் கார்ப்பரேட் தனியார் நிறுவனங்கள் பயன்பெறுமே தவிர, அரசுக்கோ, பொதுமக்களுக்கோ, ஊழியர்களுக்கோ பயன் உண்டா? நியமனங்களில் சமூக நீதி, இட ஒதுக்கீடு இருக்காதே!

எந்தவொரு துறையையும் நவீனமயமாக்குவதும், கணினிமயமாக்குவதும், அதன் செயல்பாடுகளை தொழில்நுட்ப ரீதியாக எளிமையாக்குவதும் வரவேற்கத் தக்கது. முன்பே, அத்தகைய பணிகள் தமிழ்நாடு அரசால் செய்யப்பட்டிருக்கின்றன. அதற்குத் தனியாரிடம் கொடுக்க வேண்டிய அவசியம் என்ன? ஒவ்வொரு பதிவுக்கும், முத்திரைத் தாள் கட்டணம், பத்திரப் பதிவுக் கட்டணங்களைத் தவிர, தனியாக, இப்பதிவுகளை மேற்கொள்ளும் தனியார் நிறுவனங்களுக்குச் சேவைக் கட்டணம் கொடுக்க வேண்டும் என்பது பொது மக்களின் மீது சுமத்தப்பட்டும் கூடுதல் சுமை அல்லவா? அதிலும், சாதாரண சேவைக் கட்டணம் ரு.2090–இல் தொடங்கி, தட்கல் பிரீமியம் சேவைக் கட்டணம் – ரூ.10,630 வரை தனியார் நிறுவனங்கள் வசூலிக்கலாமாம்.

தமிழ்நாடு முழுவதும் ஓர் ஆண்டுக்கு சராசரியாக 35 லட்சம் பதிவுகள் மேற்கொள்ளப்படுகின்றன. பதிவுக் கட்டணம் ரூ.2000 முதல் ரூ.10,000 வரை – சராசரியாக ரூ.5,000 என்று கணக்கிட்டால் கூட, ரூ.1,750 கோடியிலிருந்து ரூ.2,000 கோடி வரை தனியார் நிறுவனத்துக்குச் செல்லும். அதில் 25 முதல் 35 சதவிகிதம் மட்டுமே அரசுக்கு அத் தனியார் நிறுவனம் செலுத்த வேண்டும் என்று சொல்லப்படுகிறது. எஞ்சிய சுமார் 1,300 கோடி ரூபாயை மக்களிடமிருந்து பறித்து, தனியாருக்குத் தாரை வார்க்க வேண்டிய அவசியம் என்ன? இந்த வருவாயைக் கணக்கிட்டு, எந்தப் புதிய வசதியையும் தமிழ்நாடு அரசே செய்துவிடலாமே! சார் பதிவாளர் அலுவலகங்களின் எண்ணிக்கையை, பணியாளர்களின் எண்ணிக்கையை அதிகப்படுத்தலாமே! அதன் பலனாக நேரடியாக வேலைவாய்ப்பைக் கூட உருவாக்கலாமே!

அது மட்டுமல்லாமல், கடந்த தி.மு.க. ஆட்சியில் அறிமுகப்படுத்தப்பட்ட 3.0 என்ற முறையிலான 'நேரடியாக வரவேண்டிய அவசியம் இல்லாமல் பதிவு செய்யும் முறை' என்பது பல்வேறு சிக்கல்களுக்கும், முறைகேடுகளுக்கும் வழிவகுக்கும், மேலும் பல சிக்கல்கள் இருப்பது குறித்து அன்றைய பதிவுத் துறை அமைச்சரிடமே முறையிடப்பட்ட தால், அதன் ஆபத்தைப் புரிந்து கொண்டு அத் திட்டத்தை உடனடியாகச் செயல்படுத்துவதிலிருந்து, பிரச்சினைகளைச் சரி செய்வதற்காகத் தற்காலிகமாக நிறுத்திவைத்தது தி.மு.க. அரசு.

ஆனால், பிரச்சினைகள் குறித்து கவலை கொள்ளாமல், அதை இப்போது நடைமுறைப்படுத்தியுள்ளது த.வெ.க. அரசு. ஆள் இல்லாமல் பதிவேற்றும் முறையில் ஏராளமான சிக்கல்கள் எழ வாய்ப்பிருப்பதைக் குறித்து பத்திரப் பதிவு ஆவண எழுத்தர்கள், வழக்குரைஞர்கள், பட்டயக் கணக்காளர்கள் உள்ளிட்டோர் விரிவாக பிரச்சினை களைச் சுட்டிக்காட்டிப் போராடி வருகின்றனர். அவர்களின் வாழ்வாதாரம் மட்டுமல்ல, இதன் மூலம் மக்களின் சொத்துப் பாதுகாப்புக்கே ஆபத்து எழும் என்று அச்சம் தோன்றியுள்ளது. அதற்கான பாதுகாப்பு ஏற்பாடுகள் என்ன என்று எழுந்துள்ள கேள்விக்கு, இதுவரை அரசிடமிருந்து பொறுப்பான பதில் எதுவும் வரவில்லை. சுயதொழில் லாகச் செய்து வரும் பல்லாயிரம் பேரின் வாழ்க்கை இப்போது ஏதோ ஒரு தனியார் கார்ப்பரேட் நிறுவனத்தின் கைகளுக்குப் போகப் போகிறது.

ஆங்கிலம் அறியாத மக்களுக்கான அநீதி அல்லவா?

இன்னொருபுறம், சொத்துப் பதிவின் போது, சொத்து விவரங்களை (Schedule) ஆங்கிலத்தில் தான் பதிவு செய்ய முடிகிறது என்று பல சார் பதிவாளர் அலுவலகங்களில் தெரிவிக்கப்பட்டுள்ளது. தமிழில் செய்யுங்கள் என்று கேட்டதற்கு, 'அதற்கு வாய்ப்பில்லை, ஆங்கிலத்தில் மட்டும் தான் பதிவு செய்ய முடிகிறது' என்று அலுவலர்கள் தெரிவித்திருக்கிறார்கள் என்று செய்தி வருகிறது.

உயர்நீதிமன்ற நடைமுறைகளே தமிழில் வரவேண்டும் என்று பல ஆண்டுகளாக நாம் போராடிக் கொண்டிருக்கும் நிலையில், ஆங்கிலத்தில் மட்டுமே சொத்து விவரங்களைப் பதிவு செய்ய முடியும் என்று தொழில்நுட்பத்தைக் காரணம் காட்டி நெருக்கடி தருவது, ஆங்கிலம் அறியாத மக்களுக்கான அநீதி அல்லவா?

புதிய தொழில்நுட்பங்களை, புதிய முறைகளைக் கண்ணை மூடிக் கொண்டு நாம் எதிர்ப்பவர்கள் அல்லர். ஆனால், அதனால் குழப்பங்கள் ஏற்பட வாய்ப்பிருக்கிறது என்று சந்தேகம் எழும்போது, அதைச் சரி செய்ய வேண்டிய கடமை அரசுக்கு இருக்கிறது.

அத்துடன், வருவாய் தரக் கூடிய அனைத்துத் துறைகளையும் தனியாருக்குத் தாரை வார்த்துவிட்டு, மக்களையும், அரசையும் ஒரு சேர நெருக்கடிக்கு உள்ளாக்கி அதன் மூலம் பயன் அடையப்போவது யார் என்பது மிக முக்கியமான கேள்வியாகும்.

பதிவுத் துறையில் தனியார் மயம் என்பதும், ஆங்கில மயம் என்பதும் அவசியமற்றது; முறைகேடு களுக்கு வழியமைக்கக் கூடியது; கண்டிக்கத்தக்கது; பொதுமக்களின் நலன்களைப் பலி கொடுப்பது. இதனை உடனடியாகக் கைவிட வேண்டும் என்று தமிழ்நாடு அரசையும், முதலமைச்சரையும் வலியுறுத்துகிறோம்.

இவ்வாறு கி.வீரமணி அவர்கள் தெரிவித்துள்ளார்.

தி.மு.கழகப் பொதுச்செயலாளர் துரைமுருகன் அறிக்கை!



எனது பெயர்த்தி திருமணம் குறித்து சில விளக்கங்களை கழகத் தோழர்களுக்கும் மற்றவர்களுக்கும் தெரிவித்துக் கொள்ள விரும்புவது யாதெனில்;

தலைவர் கலைஞர் அவர்களின் அடியொற்றி, நீண்ட அரசியல் பயணம் மேற்கொண்டு வரும் எனது திருமணம், தலைவர் கலைஞர் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. அதைப்போலவே, நான் முன்னின்று நடத்திய என் மகன் திருமணம் தலைவர் கலைஞர் அவர்கள் தலைமையில் நடைபெற்றது என்பதை நாடே அறியும்.

அயல்நாட்டில் கல்வி பயின்ற எனது பெயர்த்தி, தான் வேற்று சாதியைச் சேர்ந்த ஒருவரை காதலித்து வருவதாகவும் அவரையே திருமணம் செய்து கொள்ள விரும்புவதாகவும் வைதீக முறைப்படியே திருமணம் செய்து கொள்ளப் போவதாகவும் என்னிடம் தெரிவித்தார். அவரது விருப்பத்தின்படியே வைதீக முறையில் எனது பெயர்த்தியின் திருமணம் நடைபெற்றது.

எனது பெயர்த்தியின் வற்புறுத்தலின் பேரில்தான், இவ்வைதீக முறை திருமணத்தை ஏற்றுக் கொள்ள வேண்டிய கட்டாயம் எனக்கு ஏற்பட்டுவிட்டது. நடைபெற்ற இந்நிகழ்வுக்கு நான் வருத்தம் தெரிவித்துக் கொள்கிறேன்.

இதனை அரசியலாக்கவோ அல்லது விவாதப் பொருளாக்கவோ யாரும் முன்வர வேண்டாம் என கேட்டுக் கொள்கிறேன்.

துரைமுருகன்
பொதுச் செயலாளர் தி.மு.க.

மும்பை தி.மு.க. முன்னாள் அவைத் தலைவர்

கல்வித்தந்தை வி.தேவதாசன் 7-ஆம் ஆண்டு நினைவஞ்சலி நிகழ்ச்சி!

அலிசேக் மீரான் – ம.சேசுராசு – முன்னணியினர் பங்கேற்பு!



மும்பை, நவ.8-

மும்பை தி.மு.க.வின் முன்னாள் அவைத் தலைவர் கல்வித்தந்தை வி.தேவதாசன் அவர்களின் 7-வது ஆண்டு நினைவஞ்சலி நடைபெற்றது.

பம்பாய் திருவள்ளுவர் மன்றத்தை தொடங்கி அதன் தலைவராகவும் அதன்மூலம் கல்வி நிறுவனங்களை நிறுவி மும்பை பாண்டுப்பில் பிரைட் இளநிலை கல்லூரி தாளாளராகவும் ஒருங்கிணைந்த மும்பை தி.மு.க.வின் அவைத் தலைவராகவும் திகழ்ந்தவர் மறைந்த வி.தேவதாசன் ஆவார்.

தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர், கழகத் தலைவர் தளபதியார் ஆகியோரை மும்பைக்கு அழைத்து கூட்டங்கள் நடத்தியவர் 2019 ஆம் ஆண்டு விழுப்புரத்தில் நடைபெற்ற தி.மு.க. முப்பெரும் விழாவில் தி.மு.க. தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களிடம் பெரியார் விருது பெற்றவர் மறைந்த தேவதாசன் ஆவார்.

கலைஞர் எழுதிய குறளோவியத்தை இந்தியில் மொழிபெயர்ப்பு செய்து அதை அப்போதைய உத்திர பிரதேச முதல்வர் லாலுபிரசாத் யாதவை வைத்து பாட்னாவில் வெளியிட்டார்.

2017-ஆம் ஆண்டு தனது பள்ளி வளாகத்தில் திருவள்ளுவர் சிலையை நிறுவி அதை திமுக தலைவர் தளபதியார் அவர்களை வைத்து திறந்து வைத்தார்.

தமிழகத்தில் இருந்து 100-க்கும் மேற்பட்ட அறிஞர் பெருமக்கள் புலவர்கள் எழுத்தாளர்களை அழைத்து வந்து மாநாடு நடத்தினார்.

தி.மு.க. மீதும் தலைவர் மீதும் மிகுந்த பற்று கொண்ட அவர் மும்பை தி.மு.க. வளர்ச்சிக்கு நிறைய உதவிகளை செய்து உள்ளார். தன்னோடு சம காலத்தில் தி.மு.க.வில் பணியாற்றிய கழக தோழர்களுக்கு உற்சாகமும் ஆலோசனைகளும் வழங்கி கோவண்டியிலும், ஜெரிமெரியிலும் பள்ளிகள் உருவாக காரணமாக இருந்தார்.

2011-ல் தலைவர் கலைஞர் கைதானபோது வெகுண்டெழுந்து அப்போதைய தி.மு.க. செயலாளர் த.மு.பொற்கோ இளைஞரணி அமைப்பாளர் ம.சேசுராசு அவர்களோடு நூற்றுக்கணக்கான கழக தோழர்களை அழைத்து ஊர்வலமாக சென்று மகாராஸ்ட்டிரா கவர்னர் அவர்களிடம் மனு கொடுக்க செல்ல காரணமாக இருந்தவர்.

1996-ஆம் ஆண்டு தேர்தல் நிதியாக தலைவர் கலைஞர் அவர்களிடம் தேர்தல் நிதியாக 5 இலட்சம் கொடுத்தவர். அவரது 7வது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு பாண்டுப்பில் உள்ள பிரைட் மேல்நிலைப்பள்ளி அரங்கத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் பம்பாய் திருவள்ளுவர் மன்ற செயலாளர் ஜேம்ஸ்தேவதாசன், தலைவர் எம்.செல்வராஜ், பொருளாளர் ஜான் கென்னடி, கல்லூரி முதல்வர் திருமதி ஜஸ்டின் ஜேம்ஸ், நிர்வாக அதிகாரி திருமதி ஜெவின் சேக்கப் இலெமுரியா அறக்கட்டளையின் தலைவர் சு.குமணராசன், திருமதி நங்கைகுமணராசன், மும்பை புறநகர் திமுக பொறுப்பாளர் அலிசேக் மீரான். மும்பை தி.மு.க. பொறுப்பாளர் ம.சேசுராசு, தி.மு.க. இளைஞரணி அமைப்பாளர் நா.வசந்தகுமார், திமுக பொறுப்புக் குழு உறுப்பினர்கள் வதிலை பிரதாபன், சா.சி.தாசன், சிவகுமார், சோ.பாபு, ம.நீதிதுரை.

இந்திய பேனா நண்பர்கள் பேரவையின் தலைவர் மா.கரூண், ஆசிரியர் குமார செல்வன் பகுத்தறிவாளர் கழக தலைவர் அ.இரவிச்சந்திரன், பம்பாய் நாடார் பேரவை தலைவர் இராஜ. இளங்கோ, செயலாளர் பேலஸ்துரை,

மற்றும் பிரைட் மேல்நிலைப்பள்ளி, இளநிலை கல்லூரி ஆசிரியர்கள் மாணவர்கள் பல்வேறு தமிழ் அமைப்பைச் சேர்ந்த பிரமுகர்கள் அலங்கரிக்கப்பட்ட அவரது புகைப்படத்திற்கு மாலை அணிவித்து மலர் தூவி நினைவஞ்சலி செலுத்தினார்கள்.

விடுமுறை அறிவிப்பு

இன்று (08.11.2026 – ஞாயிற்றுக்கிழமை) முரசொலி அலுவலகத்திற்கு விடுமுறை. முரசொலியின் அடுத்த இதழ் நாளை மறுநாள் (10.11.2026 – செவ்வாய்க்கிழமை) வழக்கம் போல் வெளி வரும்.

தலைமை நிர்வாகி
முரசொலி

மீனவ மக்களின் கதறல் சத்தம் கேட்கவில்லையா?

விஜய்யின் போலித்தனத்திற்கு காலம் நிச்சயம் பாடம் கற்பிக்கும்!

தி.மு.க. ஐ.டி.விங் கண்டனம்!

சென்னை, நவ. 8–

புயல் சீற்றத்தில் சிக்கி உயிரிழந்த காசிமேடு மீனவர்களின் குடும்பத்திற்கு நேரில் ஆறுதல்கூட தெரிவிக்காத முதலமைச்சர் விஜய், நடிகை திரிஷாவுடன் ஆடம்பர கல்யாணத்தில் பங்கேற்றது பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது. கடலில் எங்கள் உயிர் போய்க் கொண்டிருக்கும்போது, கல்யாண வீட்டில் நீங்கள் சிரித்துக் கொண்டிருக்கிறீர்களே? என மீனவர்கள் ஆவேசமாக கேள்வி எழுப்புகின்றனர்.

நடுக்கடலில் முரசு புயல் சீற்றத்தில் சிக்கி காசிமேடு மீனவர்கள் ஹ பேர் உயிரிழந்த சம்பவம் தமிழ்நாடு முழுவதும் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது. தங்கள் சொந்தங்களின் உயிரை பறிகொடுத்து, வாழ்வாதாரத்தை இழந்து, காசிமேடு மீனவ மக்கள் வேதனையில் பரிதவித்து வருகின்றனர். படகு உடைந்து, வலைகள் அறுந்து, கடனில் மூழ்கி, அடுத்த வேளை உணவுக்கே வழியில்லாமல் கதறிக் கொண்டிருக்கிறார்கள் காசிமேடு மீனவ குடும்பத்தினர். கணவனை இழந்த மனைவிகளும், தந்தையை இழந்த பிள்ளைகளும் கண்ணீருடன் அரசின் உதவிக்காக காத்திருக்கிறார்கள். ஆனால் அவர்களின் கதறல் சத்தம் ஆட்சியாளர்களின் காதுகளுக்கு எட்டவில்லை என மீனவ மக்கள் குமுறுகின்றனர். சொந்த மக்கள் உயிருக்கு போராடிக் கொண்டிருக்கும் போது, அவர்களோடு நிற்க மனமில்லாமல், எந்தவித கூச்சமும் இன்றி, முதலமைச்சர் விஜய், சொகுசான ஆடம்பர கல்யாணத்திற்கு நடிகை திரிஷா உடன் ஆடம்பரமாக சென்றதாக விமர்சனங்கள் எழுந்துள்ளன.

இந்நிலையில் தி.மு.க.ஐ.டி.விங்கின் சமூக வலைதளப் பதிவு வருமாறு: –

வாக்குறுதி அளித்த வாய் எங்கே? மக்களுக்காக ஓடோடி வருவேன் என்ற விஜய் எங்கே?

உங்களுக்கு ஒன்று என்றால் உங்கள் வீட்டில் ஒருவனாக இந்த விஜய் வந்து நிப்பான் என்று தேர்தல் பிரச்சாரத்தின் போது மேடைக்கு மேடை முழங்கிய அந்தப் போலி வாய்கள் இப்போது எங்கே போயின?

கேவலம் சில ஓட்டுகளுக்காகவும், அதிகாரப் பீடத்திற்காகவும் மக்களை ஏமாற்றி, நாடகமாடி பதவி நாற்காலியில் போய் அமர்ந்த பிறகு இந்த விஜய் இப்போது எங்கே போய் நிற்கிறார்?

கடல் நடுவே புயலில் சிக்கி, வாழ்வாதாரத்தை இழந்து, தம் சொந்தங்களின் உயிரைப் பறிகொடுத்து அனாதையாய் நிற்கிறார்களே எங்கள் மீனவ மக்கள், அவர்களின் கதறல் சத்தம் உங்கள் ஆடம்பரக் காதுகளுக்கு எட்டவில்லையா? சொந்த மக்கள் உயிருக்குப் போராடிக் கொண்டிருக்கும் போது, அவர்களோடு நிற்க மனமில்லாமல், எந்தவிதக் கூச்சமும் இன்றி சொகுசான ஆடம்பரக் கல்யாணத்திற்கு ஆடம்பரமாகச் செல்கிறீர்கள், இதுதான் நீங்கள் சொன்ன வீட்டுப் பிள்ளையா?

விஜய் அவர்களே புளுகு மூட்டைகளை அவிழ்த்துவிட்ட உங்களிடம் கேட்கிறோம், உங்கள் சொந்தக் குடும்பத்தில் ஒருவருக்கு இப்படி ஒரு கொடூர அசம்பாவிதம் நடந்திருந்தால், அதை மறந்துவிட்டு இப்படித்தான் ஆட்டமும் பாட்டமுமாகச் சொகுசுக் கல்யாணத்திற்குப் போவீர்களா?

உங்கள் ஒவ்வொரு வீட்டிலும் விஜய் இருக்கிறான் என்று கூசாமல் பொய் சொன்னீர்களே, இன்று கதறித் துடிக்கும் பல மீனவக் குடும்பத்தின் கண்ணீர் குரல் கூட உங்கள் மனசாட்சியை உருக்கவில்லையா? வாக்குகளுக்காக இனிக்கப் பேசுவதும் பதவி வந்ததும் மக்கள் உயிருக்குப் போராடும் போது ஆடம்பர விழாக்களில் களிப்பதும் அப்பட்டமான சுயநல அரசியல்!

ஆபத்தில் ஓடி வராதவர் உங்கள் வீட்டுப் பிள்ளையும் இல்லை; தலைவனும் இல்லை! மக்களின் கண்ணீரை அலட்சியப்படுத்தும் இந்தப் போலித்தனத்திற்கு காலம் நிச்சயம் பாடம் கற்பிக்கும்!

இவ்வாறு அதில் தெரிவிக்கப் பட்டுள்ளது.



கிருஷ்ணகிரி நகர்மன்றப் பொறுப்புத் தலைவர் சாவித்திரி கடலரசுமூர்த்தி பண்டிகையையொட்டி கிருஷ்ணகிரி நகர மன்றத்தில் பணிபுரியும் தூய்மைப் பணியாளர்கள் மற்றும் அலுவலக ஊழியர்கள் நகர் மன்ற உறுப்பினர்களுக்கு பட்டாசு மற்றும் இனிப்புகள் வழங்கி வாழ்த்துக்களை தெரிவித்தார். உடன் மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் தினேஷ் ராஜன், கவுன்சிலர்கள், பாலாஜி, மத்தின், முகமது ஜான், புவனேஸ்வரி தேன்மொழி, மாவட்டப் பொறியாளர் அணி துணை அமைப்பாளர் சேரன் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

செஞ்சி அருகே சிறுமி மாயமான வழக்கு காவல்துறை தினறல்!

26 நாட்கள் ஆகியும் வழக்கில் எந்த முன்னேற்றமும் இல்லை!

விழுப்புரம், நவ.8-

விழுப்புரம் மாவட்டம் செஞ்சி அருகே ஆலம்பூண்டியை சிறுமி மாயமாகி 26 நாளாகியும், வழக்கில் எந்த துப்பும் கிடைக்கவில்லை. இதனால் சிறுமியின் பெற்றோர் மற்றும் உறவினர்கள் கடும் அச்சத்தில் உள்ளனர். சிறுமியை கண்டுபிடிக்க முடியாமல் காவல்துறை தினறி வரும் நிலையில், சிபிசிஐடி விசாரணையும் 15 வது நாளை எட்டியுள்ளது. இதனிடையே, சந்தேகத்திற்கிடமான 5 நபர்களிடம் விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மேலும், இந்த வழக்கு தொடர்பாக நடுப்பட்டு கிராமத்தைச் சேர்ந்த வில்லுப்பாட்டுக் குழுவினரிடமும் தீவிர விசாரணை நடத்தப்பட்டு வருகிறது. சிறுமி மாயமான நாளன்று அவரின் வீட்டைக் கடந்து வில்லுப்பாட்டுக் குழுவினரின் வாகனங்கள் சென்றுள்ளது விசாரணையில் தெரியவந்துள்ளது. அதன் அடிப்படையிலும் காவல் துறை விசாரணை நடத்தி வருகின்றனர். இதனிடையே, சிறுமி மாயமாகி இன்றுடன் 26வது நாட்கள் ஆகும் நிலையில், வழக்கில் எந்த முன்னேற்றமும் இல்லாத தால், பெற்றோர் மற்றும் ஊர் பொதுமக்கள் பெரும் அச்சத்தில் உள்ளனர்.

ஓட்டுநர்கள் தேவை !

முரசொலி அலுவலகத்தில் ஜீப், வேன் மற்றும் எலக்ட்ரிக் ஆட்டோ இயக்குவதற்கு முன்னனுபவம், உரிய கல்விச் சான்று, ஓட்டுநர் உரிமம் மற்றும் பணியின் அனுபவச் சான்று இத்தனையும் உள்ளவர்கள் பகல் மற்றும் இரவுப் பணிக்கு சுழற்சி முறையில் பணியாற்றிட கீழ்க்கண்ட முகவரியில் (ஞாயிற்றுக்கிழமை தவிர்த்து) அலுவலக நாட்களில் காலை 10.00 மணி முதல் மாலை 5.00 மணிக்குள் நேரில் அணுகவும்.

நேரில் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி :–
பொதுமேலாளர்
முரசொலி – நாளிதழ்
180, கோடம்பாக்கம் நெடுஞ்சாலை,
சென்னை – 600 034.
தொலைபேசி : 044– 45849900